# உச்சி பிள்ளையார் ஆலயம்

## சாந்திப்பிரியா





திருச்சி நகரில் ஐநூறு படிக்களுக்கும் மேலான எண்ணிக்கையிலான படிகளில் ஏறிச் செல்ல வேண்டிய உயரத்தில், 3 பில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்த பாறையின் உச்சியில் மீது கட்டப்பட்டு உள்ளதே உச்சிப் பிள்ளையார் ஆலயம் ஆகும். 15 ஆம் நூற்றாண்டை சார்ந்ததாக கூறப்படும் இந்த ஆலயம் பல்லவ மன்னன் ஒருவரால் கட்டப்பட்டு உள்ளது. இந்த ஆலயம் உள்ள பாறையின் சிறப்பைக்

குறிப்பிட வேண்டும் எனில் அது சுமார் 3500 ஆண்டுகளுக்கும் முற்பட்ட பாறை எனவும் இமய மலையை விட பழமையானது எனவும் கூறுகின்றனர்.

உச்சி பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள மலையின் அடியில் ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இன்னொரு வினாயகர் ஆலயமும் மலைக்கு மத்தியில் தாயுமானவர் என்ற பெயரில் சிவபெருமான் ஆலயமும் உள்ளன. சிவபெருமான் ஆலயத்தில் நூறு தூண்கள் உள்ளன. மேற் கூறை தங்கத்தினால் வேயப்பட்டு உள்ளது. மலை உச்சியில் உள்ள உச்சிப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து உறையூருக்குச் செல்ல பண்டைய காலத்தில் ஆட்சியில் இருந்த மன்னர்கள் சுரங்க வழிப் பாதையை அமைத்து இருந்ததாகவும், அந்த வழி தற்போது மூடப்பட்டு விட்டதாகவும் கூறுகின்றனர். உச்சிப் பிள்ளையார் தோன்றிய கதையும், தாயுமானவர் என்ற சிவனார் ஆலயம் எழுந்த கதையும் சுவையானது.

இந்த ஆலயத்தில் வினாயகப் பெருமான் எப்படி அமர்ந்து கொண்டார் என்பதற்கு கூறப்படும் ஒரு கதை இது. இராமாயண கால யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது ஸ்ரீ இராமபிரான் இலங்கைக்குச் சென்று இராவணனை வதம் செய்து விட்டு அயோத்திக்குத் திரும்பினார். அவருடைய பட்டாபிஷேகமும் நடந்தேறியது. அதில் கலந்து கொள்ள இராவணனின் சகோதரன் விபீஷணரும் ஸ்ரீ இராமபிரானுடன் வந்திருந்தார். பட்டாபிஷேகம் முடிந்த பின் ஸ்ரீ இராமபிரானிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டு தன் நாட்டிற்குத் திரும்பக் கிளம்பிய விபீஷணருக்கு ஸ்ரீ இராமபிரான் தனது அன்புப் பரிசாக ஸ்ரீ ரங்கனாதர் சிலை ஒன்றை தந்திருந்தார். அந்த விக்கிரகம் மிகவும் சக்தி வாய்ந்தது. அதில் பகவான் மகாவிஷ்ணுவே ஒரு விமோசனத்திற்காக அமர்ந்திருந்ததாக ஒரு கதை உண்டு. அப்படிப்பட்ட அந்த சிலையை விபீஷணனிடம் ஸ்ரீ இராமபிரான் தந்த பொழுது ‘எந்த காரணத்தைக் கொண்டும் அதை பூமியில் வைத்து

விடக்கூடாது எனவும், அப்படி வைத்துவிட்டால் அதை மீண்டும் எடுத்துப் போக முடியாது' எனவும் கூறி இருந்தார். ஆனால் ஸ்ரீ இராமபிரான் அந்த சிலையை அவரிடம் தந்தது தேவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஒரு அசுரனிடம் சக்தி வாய்ந்த மகாவிஷ்ணுவின் விக்கிரகம் இருக்கலாமா என கோபமுற்றனர். வினாயக பெருமானிடம் சென்று அவரிடம் அதைப் பற்றிக் கூறி அவனிடம் இருந்து அதை பறித்துக் கொள்ள வேண்டும் என வேண்டினர். வினாயக பெருமானும் அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார். அதற்கு இருந்த பின்னணி காரணம் அவருக்கு மட்டுமே தெரியும். அது என்ன எனில் அதற்கு பல காலம் முன்பு அந்த காவிரி ஆற்றின் கரையில் பகவான் மகாவிஷ்ணு தவத்தில் அமர்ந்து இருந்தார். தவம் முடிந்து வைகுண்டத்திற்கு திரும்பிப் போக வேண்டும். அப்போது அவர் மனம் நினைத்தது. 'இத்தனை ரம்மியமான இடத்தில் நான் வந்து தங்கினால் மனதிற்கு எத்தனை சுகமாக இருக்கும்'. அப்பொழுது அங்கு தங்கி இருந்த வினாயக பெருமான் அவருடைய ஏக்கத்தின் தன்மையை புரிந்து கொண்டு அவரிடம் வந்து பகவான் மகாவிஷ்ணு அங்கு வந்து தங்க தாம் எற்பாடு செய்வதாக வாக்குறுதி தந்திருந்தார். பகவான் மகாவிஷ்ணுவின் ஏக்கத்தை நிறைவேற்றும் தருமணம் வந்து விட்டிருந்தது என்பது எவருக்கும் தெரியாது.

அயோத்தியை விட்டுப் புறப்பட்ட விபீஷணர் திருச்சி நகரை வந்தடைந்தார். காவிரி ஆறும் அனைத்து இடத்திலும் ரம்மியமாக ஓடிக் கொண்டு இருந்தது. பக்கத்திலே பாறை மலை சூழ்ந்த வனப் பகுதி இருக்க, அந்த ஆற்றுக் கரை வழியே சென்ற விபீஷணனுக்கு ஒரு ஆசை தோன்றியது. இந்த காவிரி ஆற்றில் முழுகிக் குளித்தால் எத்தனை இதமாக இருக்கும். அதை எதிர்பார்த்தே அந்த இடத்தின் அருகில் ஒரு சிறுவன் உருவில் வினாயக பெருமானும் காத்திருந்தார்.

விபீஷணன் அந்த நதியில் குளித்துவிட்டு வரும் வரையில் அந்த விக்கிரகத்தை வைத்துக் கொள்ள எவராவது கிடைப்பார்களா எனத் தேடிய பொழுது, தூரத்தில் சிறுவன் உருவில் நின்று கொண்டு இருந்த வினாயக பெருமான் தென்பட அவரை அழைத்து அந்த விக்கிரகத்தை பூமியில் வைத்துவிடாமல் தான் குளித்து விட்டு வரும்வரையில் வைத்திருக்க முடியுமா என கேட்டார். வினாயக பெருமானும் அதை வைத்துக் கொள்வதில் தமக்கு எந்த சிரமமும் இல்லை என்றும் ஆனால் தான் அவசரமாக ஒரு இடத்திற்குச் செல்ல வேண்டி இருந்ததினால் சில மணி நேரம் மட்டுமே அதை வைத்திருக்க முடியும் என்றும், நேரமாகி விட்டால் தான் அவரை அழைத்தவுடன் உடனே அவர் கிளம்பி வராவிடில் விக்கிரகத்தை கீழே வைத்துவிட்டுச் சென்று விடுவேன் எனவும் கூறினர். அவர் கொடுத்த அவகாசம் போதுமானதாக இருந்ததினால் விபீஷணன் அந்த விக்கிரகத்தை அவரிடம் தந்து விட்டு நதியில் குளிக்கச் சென்றார். நதிக்குள் இறங்கியவர் குளிப்பதில் இருந்த ஆனந்தத்தில் தன்னை மறந்தார். வினாயகர் கொடுத்த கெடு தாண்டியதும், வினாயக பெருமான் எத்தனை குரல் கொடுத்தும் விபீஷணன் வராததினால் அந்த விக்கிரகத்தை கீழே வைத்துவிட்டு வினாயக பெருமான் செல்லத் துவங்கினார். அவர் அந்த விக்கிரகத்தை கீழே வைத்தப் பின்னர்தான் அவர் அழைத்தது விபீஷணர் காதில் விழுந்தது. கரையேறி ஓடி வந்தார். பூமியில் சிலை இருந்தது. அதை எடுக்க முயன்றார். ஆனால் அதை அசைக்கக் கூட முடியவில்லை.

கோபமுற்ற விபீஷணர் அந்த சிறுவனைத் தேடினார். மலை உச்சி மீது ஏறி சென்று கொண்டு இருந்தவரை துரத்திப் பிடித்தார். சிறுவன் உருவில் இருந்த வினாயக பெருமானோ தனது பக்கத்து நியாயத்தை எடுத்துக் கூறியும் அதைக் கேட்காமல் அவருடைய தலையில் ஓங்கி அடித்தார் விபீஷணர். அவ்வளவுதான் வினாயகர் தன் சுய ரூபத்தைக் காட்ட, அவர் கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரினர் விபீஷணன்.

வினாயக பெருமானும் அவனை மன்னித்து இலங்கைக்கு அனுப்பி வைத்தார். பின்னர் தானே அந்த இடத்தில் பல காலம் பொறுத்து சுயம்புவாகத் தோன்ற அவருக்கு அங்கு ஆலயம் அமைந்தது. அதை போலவே ஸ்ரீ ரங்கனாதர் அமர்ந்து இருந்த இடத்தில் ஸ்ரீ ரங்கநாதர் ஆஆலயமும் எழுந்தது. பகவான் மகாவிஷ்ணுவிற்கு வினாயக பெருமான் தந்திருந்த வாக்குறுதியும் நிறைவேறியது. அதனால்தான் இங்குள்ள வினாயக பெருமானின் சிலையின் தலையில் ஒரு வீக்கம் இருப்பதைக் காணலாம்.

இதே ஆலயத்தில் தாயுமானவர் எனும் பெயரில் சிவபெருமான் எழுந்தருளிய கதை இது. காவிரி ஆற்றின் வடக்குப் பகுதியில் இரத்னாவதி என்ற ஒருவள் வாழ்ந்து கொண்டு இருந்தாள். அவள் சிவபெருமானின் பக்தை. ஒரு முறை நிறை மாதக் கர்ப்பிணியான அவளுக்கு பிரசவ வலி எடுத்தது. காவிரியின் அடுத்தக் கரையில் இருந்த அவளுடைய தாயார் அதை கேள்விப்பட்டு அவளுக்கு உதவி செய்யக் கிளம்பி வந்தாள். துரதிஷ்டவசமாக அன்று காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டு இருந்தது. அவளால் ஆற்றைக் கடக்க முடியவில்லை. அவளுடைய கணவரும் வர முடியாமல் போய்விட்டது. பிரசவ வேதனையில் அந்தப் பெண் துடிக்கலானாள். நேரம் கடந்தது. திடீரென அவளுடைய தாயார் உருவில் ஒரு மூதாட்டி அங்கு வந்தாள், அவளுக்குப் பிரசவம் பார்த்து விட்டுத் திரும்பிச் சென்று விட்டாள். நல்லபடியாக குழந்தைப் பிறந்தது. அவளுடைய கணவரும், அவளுடைய தாயாரும் வெகு நேரம் பொறுத்தே அங்கு வந்து சேர முடிந்தது. அதற்குள் அவளுக்கு சுகப்பிரசவம் ஆகி இருந்தது. வந்தவர்கள் அவளுக்கு அவளுடைய தாயார் முன்னமே வந்து பிரசவம் பார்த்துவிட்டுச் சென்று விட்டாளே என்ற செய்தியைக் கூற, அவளுடைய தாயார் அப்பொழுதுதான் தான் அங்கு வந்ததாகவும் அதற்கான காரணத்தையும் கூற அவைரும் வியந்தனர். அப்படியானால் தாயார் தோற்றத்தில் வந்தது யார்?

அனைவரும் குழம்பி நின்றவாறு கடவுளை வணங்கி நிற்க, அவர்கள் முன் சிவபெருமான் தோன்றி தான்தான் தன்னுடைய பக்தையான இரத்தினாவதிக்கு பிரசவம் பார்த்தேன் என்ற உண்மையைக் கூற அவருடைய கருணையை எண்ணி மனம் மகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் சிந்தினர். அவர் தாயாகவே அங்கு வந்து உதவியதால், தாயும் ஆனார் என்பதைக் குறிக்கும் வகையில் அவருக்கு அங்கு தாயுமானவர் என்ற ஆலயம் எழுப்பினர். அந்த காட்சி ஆலயத்தில் பொறிக்கப்பட்டு உள்ளது.

ஏழாம் நூற்றாண்டில் சோழ மன்னர்கள் அந்த மலைப் பிரதேசத்தில் ஒரு கோட்டையைக் கட்டி பெர்ஷியர்களின் படை எடுப்பில் இரந்து தம்மைக் காத்துக் கொண்டனர். அதன் பின் அதை ராக்போர்ட் மலை என ஆங்கிலேய ஆட்சியாளர்கள் ஆட்சியில் பெயரிட அந்தப் பிள்ளையாரும் ராக்போர்ட் பிள்ளையார் என்றே அழைக்கப்பட்டார். ஒவ்ஒரு ஆண்டும் பங்குனி மாதத்தில் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் சூரிய ஒளி வினாயக பெருமான் மீது விழுவதினால் சூரிய பெருமானே நேரில் வந்து வினாயக பெருமானை வணங்குவதாக ஐதீகம் உள்ளது.

# Uchchi Pillaiyar Temple

## Santhipriya





Uchchi pillaiyar Temple, stated to be 3500 years old, and even older than the Himalayas has been constructed over a rock which is believed to be three billion years old rock. One has to climb 500 steps to reach the temple. The temple has been constructed by Pallava King in the 15th century.

At the foot of the hill of Chi Pillaiyar Temple, another temple for Lord Ganesha and Lord Shiva has also been constructed during 6th or 7th Century. The temple of Lord Shiva known as Thayumanavar temple has over 100 pillars and the roof is gold plated. It is believed that a secret tunnel existed for the Kings of those era to shuttle between Uraiyur and Uchi pillaiyar temple, but the tunnel remains sealed now.

There is a legend on how Lord Ganesha manifested in this temple. During the period of Ramayana, Lord Rama returned from Lanka after vanquishing Ravan. Ravan's brother Vibishana who was devotee of Lord Rama too came along with Lord Rama and attended the Pattabhishega ceremony held in Ayodhya. After the ceremony was over, when Vibishana departed to Lanka, Lord Rama gifted him a small idol of Lord Ranganathar which was very powerful and stated to be the one in which, Lord Vishnu resided for some time, thus enhancing the divinity of the idol. While gifting it to Vibishana, Lord Rama instructed that the idol should not be kept on ground on way for any reason, and if kept he would not be able to take it from the ground. Watching Lord Rama gifting away such a precious idol to Vibishana, unhappy celestial resented the act and went to Lord Ganesha and sought his help to ensure that Vibishana did not carry the idol to Lanka, because Vibishana belonged to the asura clan. Lord Ganesha promised them that he would do something to stop Vibishana from taking the idol to Sri Lanka. There was a specific reason for Lord Ganesha to accept their request, but did not reveal it to anyone. Once upon a time, Lord Vishnu at the end of arduous tapas which he performed on the banks of river Kaveri, desired to settle down in the same place as he derived inner happiness while staying there. Lord Ganesha promised to fulfill his desire at an appropriate time, and when the celestials requested him to stop Vibishana carrying the idol to Lanka, Lord Ganesha felt that the right time had materialized.

After departing from Ayodhya, Vibishana reached the outskirts of Trichy where river Kaveri was flowing in the midst of forest surrounded by beautiful rocky hills. As Vibishana was walking through the cool place, he felt how pleasant it would be to take a dip in the Cauvery River. Lord Ganesha was waiting in the form of a boy near the banks of river Kaveri.

When Vibishana got the urge to take bath, he began to look for someone who could hold the idol till he finished bath in the river. Waiting for such an opportunity, Lord Ganesha in the guise of a small boy appeared before Vibishana, who as expected requested Lord Ganesha in the guise of a boy to keep the idol till he finished bath and returned. Lord Ganesha agreed to hold it for certain period of time only as he had another important work. Therefore he told Vibishana that he would hold it till a specific time at the end of which, he would call Vibishana and if he failed to turn up in few minutes, then he would keep the idol on ground and go away. Since there was enough time specified by Lord Ganesha Vibishana agreed to the condition and entered into the river to take bath after handing over the idol to the boy, unaware that he was Lord Ganesha waiting to deceive him.

In the mood of blissful happiness Vibishana, while taking bath in the river, completely forgot about the idol left with Lord Ganesha and therefore could not hear the call of Lord Ganesha who wanted Vibishana to come back as he had to go. Even after calling him several times, when Vibishana did not turn up Lord Ganesha kept the idol on the ground and walked way. Lord Ganesh had indeed played a mischief deliberately to ensure that the sound of his call did not reach the ears of Vibishana and only after the idol was kept on the ground did Vibishana hear the call of Lord Ganesha. Vibishana rushed to the

bank of the river only to find the idol kept on the ground and all his efforts to take it out met with only failure as he could not even shake it.

Angered by the act of the boy, Vibishana searched for the boy and found him on the hill top. He chased and caught him and refused to hear the reason Vibishana hit the boy with a big blow on his head. Immediately Lord Vinayaga appeared before him in his true form and Vibishana apologized for his action and sought pardon, which the Lord accepted. Several years later Lord Vinayaga self-manifested in the same place and the same was enshrined in the temple constructed by the rulers. Similarly Lord Ranganathar (Lord Vishnu) too self-manifested and got himself enshrined in a temple where he desired to remain, thus getting his desire fulfilled by Lord Ganesha. One can see a small swelling on the head of Lord Ganesh's idol enshrined in the Uchi Vinayaga (Lord Ganesha) temple.

As per another mythological story, several thousand years ago a lady named Rathinavathi lived in this region. She conceived and when the period of delivery came she requested her mother who was in the other side of Kaveri River, to come and help her. While Rathinavathi got labor pain, suddenly the River was in spate and her mother could not cross the river and reach her daughter. Rathinavathi didn't know what to do other than praying to Lord Shiva since her husband was also with her mother. On the call of his pious devotee, Lord Shiva himself came in disguise of her mother and helped Rathinavathi deliver the baby. When the original mother reached after several hours, everyone realized that the lady who came and helped Rathinavathi was the Lord Shiva himself when he appeared before everyone to reveal the truth. The people then raised a shrine for Lord Shiva. As Lord Shiva played the role of mother to Rathinavathi he was called as Thayumanavar Swamy (Thayumanavar meaning 'turned into a mother' in Tamil language).

In the 7th century, the Chola kings built a fort on the hill and defended themselves from the Persian invasion. The fort was later renamed as Rockford temple during the period of British rule. It is said that every year in the month of Panguni, on three consecutive days the sun rays fall directly on Lord Vinayaga as if the Sun God offer worship to him.